# මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
# நிதி, திட்டமிடல் அமைச்சு
# MINISTRY OF FINANCE AND PLANNING

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01.
ශ්‍රී ලංකාව.

செயலகம், கொழும்பு 01.
இலங்கை

The Secretariat, Colombo 01
Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700

ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)- 11 - 2449823

වෙබ් අඩවිය / வெப்சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: PF/P/SR/01/10

ඔබේ අංකය / உமது இல. / Your No.:

දිනය / திகதி / Date: 2010.08.31

**அரச நிதிச் சுற்றறிக்கை இல: 448**

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்,
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட முறைச் சபைகள்,
அதிகார சபைகள் மற்றும் அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்.

**விலை குறிப்பிடல் (Shopping) முறையின் கீழ் பொருட்கள் மற்றும்
சேவைகளுக்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2011
(கட்டிட நிர்மாண மற்றும் ஆலோசனைச் சேவைகள் தவிர்ந்ததாக)**

மேற்கூறப்பட்ட விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 2008.09.26 ஆம் திகதிய அரச நிதிக் சுற்றறிக்கை இல: 433, 2008.12.26 ஆம் திகதிய அரச நிதிக் சுற்றறிக்கை இல: 433(i), 2009.09.28 ஆம் திகதிய அரச நிதிக் சுற்றறிக்கை இல: 433(ii) மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை இல: 440 ஆகியவற்றின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுவதுடன் வழங்குநர்களைப் பதிவு செய்தல் சம்பந்தமான அனைத்து சுற்றறிக்கைகளும் 2011.01.01 ஆம் திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்படுவதுடன், அத்திகதி தொடக்கம் அரச நிதிச் சுற்றறிக்கை இல: 448 ஆகிய இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மட்டும் செயல் வலுப்பெறும்.

02. மேற்கூறப்பட்ட சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேல் மாகாணத்தில் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களுக்கு நிதி, திட்டமிடல் அமைச்சினால் விலை குறிப்படல் (Shopping) முறையின் கீழ் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக வழங்குநர்களைப் பதிவு செய்யும் நடைமுறைகள் பின்வருமாறு திருத்தம் செய்யப்படும்.

02.1 தற்போது நிதி, திட்டமிடல் அமைச்சில் மற்றும் அரச நிதித் திணைக்களத்தில் www.treasury.gov.lk மற்றும் www.pfd.gov.lk இணையத் தளங்களில் வெளியிடப்பட்டுள்ள 2010 ஆம் ஆண்டு வழங்குநர்களின் பட்டியல் இந்த வருடத்தின் எதிர் வரும் காலப்பகுதிக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதன் பொருட்டு மேலும் உரித்துடையதாக்கிக் கொள்ள இயலும்.

2.2 நிதி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வழங்குநர்களைப் பதிவு செய்யும் நடைமுறைகள், 2011 ஆம் ஆண்டு தொடக்கம் திருத்தம் செய்யப்படுவதுடன் அரச நிறுவனங்களுக்குப் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதன் பொருட்டு கீழ்க்காணும் மாற்று நடைமுறைகள் பின்பற்றப் படலாம்.

2.2.1. சகல அரச நிறுவனங்களினாலும் விலை குறிப்பிடல் முறையின் கீழ் பெற்றுக் கொள்ளப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் பெயர்ப்பட்டியலில் (Rainbow Pages) குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களிடமிருந்து தங்களது நிறுவனத்தின் தேவைப்பாடுகள் மற்றும் குறிக்கோள்களுக்கு இணங்கும் வகையில் வழங்குநர்களைத் தெரிவு செய்து கொள்ளும் பிரமாணங்களை இணங்கண்டு மொத்த பெறுகை நடைமுறைகளிலும் தெளிவாகத் தெரியும் தன்மை மற்றும் போட்டித் தன்மை உறுதிப்படுத்தப்படும் விதத்தில் பெறுகை வழிகாட்டு நெறிக் கோவை – 2006 இன் 3.4 ஆம் பந்தி அறிவுறுத்தல்களின் பிரகாரம் பெறுகைக் கைந்நூலின் 2.14.1 இல் நியமிக்கப்பட்டுள்ள நிதி எல்லைக்குள் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

2.2.2 இலங்கை ரெலிகொம் தொலைபேசிப் பெயர்ப் பட்டியல் Rainbow Pages – வர்த்தகப் பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்படாத பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அரசாங்க நிறுவனங்கள் பெறுகை வழிகாட்டு நெறிக் கோவை – 2006 பந்தி 3.4.3 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக தமது தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

03. 2006 தேசிய பெறுகை வழிகாட்டு நெறிக் கோவையின் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக நடவடிக்கை எடுப்பதற்கு விசேட அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொண்டுள்ள அல்லது விசேட சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் அல்லது ஏதேனும் சட்டமொன்றின் மூலம் ஒதுக்கீடு எற்பாடு செய்யப்பட்டுள்ள அரச நிறுவனத்துக்கு இச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் ஏற்புடையதாகாது.

04. இச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு தங்களது அமைச்சுக்கு / திணைக்களத்துக்கு இணைந்துள்ள சகல நிறுவனங்களுக்கும் அறிவுறுத்துமாறு தயவாய் வேண்டிக் கொள்கின்றேன்.

ஒப்பம்: பீ.ஏ. அபேசேகர
திறைரேிப் பிரதிச் செயலாளர்.

பிரதி: கணக்காய்வாளர் நாயகம்.